

# அமரர். வல்லுக்குட்டி ஜெயம்

## நினைவுமலர்

04-01-2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தானை ஆனைமுகத்தானை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புத்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவொ எமையாருமாறு ஈவதொன்
றெமக்கில்லை யேல்
அதுவோ வுனதின்னருள்
ஆவடு துறையரனே!

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்று நான் பற்றுவேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவப்புரத்தரசே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருள்லை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவிளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உனர்வுசூள் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அறிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பளம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகதி தாயைக்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கட யீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டகூறுமே

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்க பூதபரம் பரைப்
பொழியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயிற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தல
தொண்டு பரவுவாம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிரவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே!
குறைமாதப் புணர் வோனே குகனேசற் குமரேசா!
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே!

## வாழ்த்து

வான்முகில் வாழாதுபெய்க மலிவளஞ் சுரங்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்க னோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிக்கும் துதிப்பாக்கள்

## கலிகைக் கந்தன் துதி

துன்னை யூரினிலே துயர்களை நீக்கு
வீற்றிருக்கும் கலிகைக் கந்தா!
தடம்பதித் தெம்மை தயவுடன் காத்திருக்கும்
கலியுக வரதா!
சன்னக் கருபொருளாய் சஞ்சரிக்கும் சரவனா
அந்தமில்லா ஆனந்த அற்புதனே ஆறுமுகா
சிந்தை குளிரச் சிவநெறியும் தான் நினைத்து
சந்ததம் அருள் சுடர்வாய் சண்முகர் செவ்வனே!

## ஸ்ரீ செல்வ சந்நதி துதி

ஆற்றங்கரை வேலனே
அருள் தனை கொண்டவனே
போற்றும் அடியார் தமை
பரக்கும் எங்கள் முரகா!
ஏற்றித் தினம் பாடியே!
என்றும் உனையே வணங்கிப்
போற்றிய பக்தையும் இன்று
பற்றியுளார் பாதம் பாருமையா

## வல்லிப்புர ஆழ்வார் துதி

ஐங்து தலை நாகம் தனில் அமர்ந்து அருளாட்சி
புரியும் கோவிந்தனே!
துயர் என வல்லிப்புர பதிக்கு வந்தவர்களுக்கு
துயர் துடைக்கும் துயர் மைந்தனே!
காசினி விட்டு விண்ணுலகம்
சென்ற எம்குல தெய்வத்தை
உன் பாதம் பணிந்து
வரமருள் வாய் மாயவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் ஆருயிர்த் சொர்க்கத் தங்கமே! அப்பா! ஆசையுடனும் ஆவலுடனும் பெற்றெடுத்தீர்கள் கண்ணை இமைக் காப்பது போல கண் தூஞ்சாமல் இரவு பகல் பாராது பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து பேணி வளர்த்தீர்கள் என்பதை எப்போதும் நினைத்து பார்க்கின்றோம்.

கண்கண்ட தெய்வமே! கசிந்துருகும் உள்ளத்தோடு இறுதி மூச்சுவரையும் எங்கள் வாழ்வு சிறந்து பொலிந்து பெருகும் மதிப்போடு விளங்க வேண்டும் என செயற்பட்டீர்கள்.

தளராத உள்ளத்தோடும் கடைமைகளை கண்ணும் கருத்துமாக எவ் ஊரிலும் அனைத்து மக்களிடனும் அன்பும் பண்புமாக செயற்பட்டு நிறைவேற்ற முனைந்தீர்கள். இறைவன் திருவருள் முன்னறிந்த சில காரியங்களை குறைவின்றிச் செய்தீர்கள்.

எங்களுக்கு அறிவான அறிவுரைகளையும் தெய்வ வழிப்பாட்டினையும் நாளாந்தம் செயற்காட்டிய அன்புக் குல தெய்வமே! அப்பா! எங்களை 'அம்மா ' இல்லாத குறைகளை ஈடு செய்து வழிகாட்டி வாழ்வளித்த எமதருமைத் தெய்வமே! உங்களிற்கு நாம் என்ன கைமாறு செய்ய முடியும் உங்கள் அளவிடற் கரிய அன்புப் பணிக்கு எதுவும் ஈடாகாது உங்கள் ஆத்மா சோதி பரஞ்சோதியுடன் கலந்திருக்க வேண்டுமென்று பிராதித்து எங்கள் அன்பு மலர் மாலையை தங்கள் ஐந்து செல்வங்களும் உங்கள் பாதங்களில் சமர்ப்பித்து என்றும் வணங்கிநிற்கின்நோம்.

வணக்கம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.வல்லுக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாறு

சைவமும் தமிழும் மிளிர்ந்து விளங்கும் திருநாட்டின் கரவெட்டி துன்னாலை தெற்குப் பகுதியில் அமரர். வல்லுக்குட்டி சின்னம்மா தம்பதியினருக்கு 1948ம் ஆண்டு ஆவணி மாதம் 23ம் திகதி அமரர் ஜெயம் அவர்கள் அன்னை மடியில் இறைவன் திருவருளால் மூன்றாவது புதல்வனாக வந்துதித்தார்.

இவர் பள்ளிப் பருவத்தை அவ்வூரான யா/ஞானசாரியார்கல்லூரியில் கல்வி பயின்றார்.

பின்னர் 1970ம் ஆண்டின் அவரது உறவான அமரர்.நல்லன். நல்லம்மா என்பவருடைய நான்காவது மகளான அமரர் ' கல்யானி ' என்பவரை பெற்றோரின் சம்மதத்தில் கைப்பிடித்தார். இல்லறமாம் நல்லறத்தை வழுவாது சிறப்புர நடத்திய வேளையில், ஜெயந்தி, சுகந்தி, ஜெயந்தன், வசந்தி, சுமிதா, ஆகிய பிள்ளைகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர்.

இவர் தன் பிள்ளைகளின் நல்வாழ்வு கருதி இல்லத்தில் ஈடுபட செய்ததின் பயனாகச் ஸ்ரீஸ்வரலிங்கம் (சுவிஸ்), தவஞானம் (லன்டன்), விஜிதா (ஜேர்மனி), சுகந்தகுமார் (பளை), தசிராகன் (பளை) ஆகிய மருமக்களைக் கிடைக்கப்பெற்று இவருக்கு அன்புக்கினிய பேரப்பிள்ளைகளான (சியானா, சிந்துஜா) (சுவிஸ்), டனக்சாந் (லண்டன்), கோபிநாத் (கொழும்பு), ஜனுசன் (ஜேர்மனி), அபோஜன், டனோஜன், சாருஜன், (பளை), மதுஷா, கிஷான், கபிஷா (பளை) ஆகியோர் கிடைக்கப் பெற்றுள்ளனர்.

இவ் வேளையில் இவரது மனைவியான அமரர். கல்யாணி என்பவர் 1998.12.07ம் திகதி பளை வைத்தியசாலையில் சிறிய சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதித்திருந்த வேளை கொடிய காலனவனால் உயிர் பறிக்கப்பட்டது. இதன்பின் ஆருயீர் அன்பு மனைவியின் துயரின் பிரிவிலிருந்து மீளமுடியாமல் அமரர். ஜெயம் அவர்கள் நோயில் பீடிக்கப்பட்டு 04.01.2022ம் திகதி செவ்வாய்க்கிழமை இவ்வுலக வாழ்வை நீந்து இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் ஜெயந்தியின் குமுறல்

-------------- அப்பா மூத்த மகள் ஜெயந்தி பேசுகின்றேன்.

காது கொடுப்பீர்களா, கை அசைப்பீர்களா, இல்லை

கண் காணா தேசம் சென்று வீட்டீர்கள் எனத் தெரிகின்றது

ஆனால் நம்ப முடியவில்லை. எங்கள் அம்மாவும் அப்பாவும்

நீங்களே ஆனீர்கள். இன்று அவ்விடத்தை யாரை விட்டு நிறைப்பீர்கள்?

யாராலும் முடியாது. உங்கள் அருமை பெருமைகளை

என்னவர் தினமும் பேசுகின்றார்.

சொல்லி சொல்லி புலமபுகின்றார்.

பேசிட வருவீர்களா அப்பா வருவீர்களா ?

உங்களின் பேத்திகள் எனும் இடத்தை தந்த எம் பிள்ளைகள் இருவரும்

அம்மப்பா, அம்மப்பா எனத் தினமும் அசை போடுகின்றனர்.

சேர்ந்து வானில் இருந்து வழிகாட்டுங்கள் அப்பா !

மீண்டும் ஒரு பிறப்புண்டேல் உங்கள் மகளாக பிறப்போம்.

ஜெயந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மகள் சுகந்தியின் குமுறல்

என் அன்புத் தெய்வமே ஆருயீர் அப்பாவே,
அன்போடு என்னை அனுதினமும் அரவனைத்தாய்
எங்கு சென்றாயோ என்னையும் என் பிள்ளைகளையும் பரிதவிக்கவிட்டு!
அப்பா உங்கள் உயிர் பிரியும் ஒரு வாரத்திற்கு
முன்பு எத்தனை தடவை எப்ப வருவாய் எப்போது வருவாய்?
வீட்டுக்கு வந்து விட்டாயா? என்று
ஏக்கத்தடன் கேட்கும் போது நான் சிறு குழந்தைக்கு
சொல்வது போல் பக்குவப்படுத்தி அன்பாய் சொன்னேன்.
தொலைபேசியில் நாளை வந்து விடுவேன் என்று
அப்பா என் இதயம் வெடித்து குமுறுகின்றது.
இருந்தும் என் குரல் கேட்ட பின்னரே உங்கள்
கண்கள் மடிந்து இந்த உலகத்தை விட்டு சென்றீர்கள்
அதிக பிரியம் இருந்ததால் என்னவோ உங்கள் அருகில்
வாழ வரமற்றோம். அப்பா!
வேர் இழந்த மரமாக தடம் முரண்டு நிற்கின்றேன்
அப்பா! எதை சொல்லி அழுவேன் என்று எனக்குத் தெரியவில்லை
எனது குடும்பத்தை விருட்சம் விட்டு பார்ப்பதற்கு விடாமல்
இவ் கொடிய காலனவன் உங்களை ஏன் கவர்ந்தானோ! புரியவில்லை
அப்பா! நான் கனவில் கூட நினைக்கவில்லை என்னையும்
பிள்ளைகளையும் பரிதவிக்க விட்டு சீக்கீரம் எம்மை விட்டு செல்வீர்கள் என்று!
என்னையும் பிள்ளைகளையும் என் கணவரிடம்
ஒப்படைக்கும் வரை நான் உங்களை விட்டு மறையமாட்டேன்
என அடிக்கடி பொலிந்தீர்கள். ஆனால் மூத்த பேரனை மட்டும் கணவரிடம் ஒப்படைத்து
விட்டு என்னைக் கதற விட்டு போய்விட்டீர்கள் அப்பா
தந்தையே நீங்கள் அருகில் இல்லாத வாழ்க்கை
வெறுத்து விட்டது. நீங்கள் இல்லா ஊரும் எனக்கு
வரவழைக்க மனசு வெறுக்கிறது.
அப்பா! அப்பா! அப்பா வென்று எத்தனை தடவை தொலைபேசில் உரையாற்றும்
போது வாய் நிறையப் கூப்பிடுவேன். எனக்கு கிடைத்த 'அப்பா அம்மா' ஒரு வரம்.
இவ்வரத்தினை எந்த ஜென்மத்திலும் எனக்கு கிடைக்காது
நீங்கள் இருவரும் என் குடும்பத்திற்கு 'சொர்க்கத்தங்கம்'
கயிரருந்த பட்டம் போல் கலங்குகின்றோம்.
நாம் மூவர்! உங்கள் நினைவுப் வேல் போல் வந்து
'வெந்த புண்ணில் குத்துதப்பா!
ஆற்றிட முடியவில்லையப்பா ஒரு ஆறதல் வார்த்தை தாருமப்பா !
தீ பற்றி எறியுதப்பா! மனம் நீறு கொண்டு
வேகுதப்பா! வேதனை தாங்காமல் விம்பி விம்மி நானும்
எனது பிள்ளைகளும் அழுகின்றோம். விண்ணில் இருந்தும்
எம்மை பார்த்துக் கொள்ளவும் அப்பா! உங்களை விட
இவ்வுலகில் யாலுமில்லை எமக்கு.
கண்ணீர் வடிக்கின்றோம் வாடித் தவிக்கின்றோம்.
ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும் போதாது உங்கள்
அன்புக்கு! இப்போது தேடுவது பத்தே நிமிடம் உங்கள் மடியை!
ஆகவே உங்கள் ஆத்மா சோதி! பரஞ்சோதியுடன்
கலந்திருக்க வேண்டும் என்று நானும் எனது கணவரும் இருப்பிள்ளைகளும்
பிரார்த்தித்து எங்கள் அன்பு மலர்மாலையை தங்கள் பாதங்களில்
சமர்ப்பித்து என்றும் வணங்கி நிற்கின்றோம்.

இங்ஙனம் நாள்தோறும்
கண்ணீர் மழையில் நனையும்
சுகந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் ஜெயந்தனின் குமுறல்

அன்பின் இலக்கணமாய் பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் வையகத்தில் எம்மை
வளர்த்து ஆளாக்கிய உத்தமனே! அப்பா! அப்பா!
என்ற பெயருக்கு இலக்கணம் தெய்வத்தின்
மறு உருவம் அப்பா நீங்கள்! தான்
எங்கள் வீட்டில் ஒரே ஆண்பிள்ளை என்றெண்ணி
அளவிற்கதிக அன்பையும் அக்கறையும்
காட்டி செல்லமாக 'தம்பி' என்னும் அழைக்கும்
உங்கள் குரல் கேட்காதோ! என்று ஏங்குதே என் செவிகள்.

உங்கள் அருகில் 16 வருட காலமாக எவ்வித
குறையும் இன்றி செல்லமாய் வளர்த்தீர்கள்குடும்பப்
பொறுப்பை அதிகம் சுமக்க விடாது எனக்கு தோள் கொடுத்து
நின்ற உத்தமனே நீங்கள் தான்! அப்பா!

அன்று தொடக்கம் இன்று வரை நல்ல பண்பும் விடா முயற்சியும்
நல்ல மனிதர்களையும் நேசிப்பதென்றால் அது நீங்கள் வழிகாட்டிய நல்வழிப்
பாதை தான் அப்பா!

தந்தையே இதுமட்டும் இன்றி என் வாழ்க்கைத் துணைவியை
எனக்கேற்ற வகையில் 'அம்மா' போல் எனக்கு அன்பும் ஆறுதலும், கவனிப்பும்
கொடுப்பதற்கு ஏற்ற துணைவியை கைப் பிடித்து வைத்தீர்கள்! இப்படியே
உங்களைப் பற்றி வர்ணித்துக் கொண்டு போக பத்திரிகையே போதாது.

உங்கள் இறுதி நிகழ்வில் கூடிய கூட்டம் உங்கள் சமூகத் தொடர்பையும்
உங்களையும் இயம்பி நின்றது. நீங்கள் தேடிய சொந்தங்கள் கூறிய கதையைக்
கேட்டு வியந்து நின்றேன் இனி உங்கள் மீதி நாட்கள் எங்கள் வாழ்விற்கு வழிகாட்ட
ஆத்மா துனையாய் வாருங்கள் அப்பா!

நீங்கள் தொடக்கிய 'ஜெயம்' என்ற வெற்றிப் பாதையின் மரபை
உங்கள் மகனான

'ஜெயந்தன்' விழாது எடுத்துச் செல்வேன் என்ற நம்பிக்கையுடன் நிம்மதியாக
கல்லறையில் உறங்குங்கள்.

என்றும் உங்கள் நினைவோடு நாம் இருப்போம்.
சென்று வாருங்கள்!
சென்று வாருங்கள்!

ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் வசந்தியின் குமுறல்

அப்பா, அப்பா என ஆசைதீர அழைப்போமே
இனி யார்வந்து அவ்விடத்தை நிரப்புவார்
ஐவரைப் பிள்ளைகளாய் பெற்றீர்கள்
எந்தநிலை வந்தபோதும் எமையெல்லாம்
ஏந்தித் தாங்கினீர்கள்
இடம் பெயர்ந்து இருந்த போதும்
ஆபத்து ஏதும் வந்திடாது. பாதுகாத்தீர்கள்
நீங்கள் தேடிய சொத்தெல்லாம் உங்கள்
கடின உழைப்பால் ஈட்டியதே
நான் விரும்பிய கணவர் சுதனை
அன்பு மருமகனாக ஏற்றுப் போற்றினீர்கள்
எங்கள் இல்லற வாழ்வுக்கு நல்லாதரவு ஆனீர்கள்
என் பிள்ளைகள் மேல் உயிராய் இருந்தீர்கள்
என்றும் என் கடைக்குட்டி சாருவை
அணைப்பீர்கள். நீங்கள் இல்லா இடம்
அவனுக்கு பெரும் வெற்றிடமானது
அப்பா சடிதியில் இப்படி போவீர்களென
சற்றேனும் நினைக்கவில்லை
உங்கள் மேல் ஊர்க் கொண்ட பாசமே
உங்கள் இறுதி நிகழ்வில் எவ்வளவு
நிறைந்த மக்கள் கூட்டமானவை
நான்கு நாட்களாய் எங்கள் வீட்டில்
நீட்டிநிமிர்ந்து படுத்துறங்கிய உங்கள்
நினைவே என் நெஞ்சை நிறைக்கிறது
மறக்க நினைத்தாலும் மறுபடி மறுபடி
நீங்களே என் நினைவில். இனி உங்களைப்
படமாய்த் தானே பார்க்க முடியும் ஆனாலும்
எம் வாழ்வுக்கு பலமாய் வாருங்கள்
அப்பா.......... அப்பா.........
மகள் வசந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குட்டி மகள் சுமிதாவின் நினைவுக் குமறல்

அப்பா உங்கள் கடைக்குட்டி
சுமிதாவின் கதை கேட்பீர்களா?
அப்பா நான் பேசும் மொழி
புரிகிறதா?வளவெல்லாம்
தேடுகிறேன் யாரிடம் போனீர்கள் அம்மாவைக்
கண்டீர்களா சொல்லுங்கள்.
என் பிள்ளைகள் மூவரும்
அம்மப்பா ஏன்இப்படி ஆனார்
எனும் ஏக்கத்துடன் உள்ளனர்
எப்படி அவர்களிற்கு ஆறதல்
கூறித்தேற்றுவேன்
என் வளவெல்லாம் உலாவிய
உங்களை எங்குமே காணவில்லையே? உங்கள்
கால் பட்ட இடமெல்லாம்
கண் பார்த்துத் தேடுதே...
உங்கள் பாதைச் சுவடுகளும்
மறைந்ததோ?
தினமும் உங்கள் பார்வையில்
இருக்கத்தானே நெல்லியடியில் இருந்து இங்கு
அழைத்தீர்கள். ஏன் இப்படி
பாதியில் மறைந்து போனீர்கள்
என்னவரை நீங்கள் தேர்வு
செய்யவில்லைத்தான்
ஆனால் சீக்கிரமே எக்குறையும்

இன்றி எமை வாழவைத்தீர்கள்
எங்களைவிட உங்கள் மருமகன்
மேல் பாச மழை பொழிவீர்கள்
இரகசியமும் பேசுவீர்கள் உங்களுக்கு தென்புட்டும்
போத்தல்கள் கைமாறிய
கதைகள் அறிந்தும்
மௌனமாயிருந்தோம்.
என்னவர் தொழில் முயற்சிக்கெல்லாம் வளம்
செய்து பலம் கொடுத்தீர்கள்
பளையில் ராகவன் பெயர்
விளங்க நீங்கள் தானே
காரணம் ஆனீர்கள் அப்படியான நீங்கள் இடையில்
ஏனிப்படி ஆனீர்கள்?
கனவிலாவது வந்து எம்மோடி
பேசுங்கள் அப்பா காத்திருந்து
கண்மூடியுள்ளோம் அதிபார்த்து
இருக்கும் எங்களை ஏமாற்றி
விடாதீர்கள் அப்பா அப்பா
விரைந்து வாருங்கள் உங்கள்
திருமுகம் காட்டுங்கள் கடைக்குட்டி சுமிதா கதை
கேழுங்கள்
சுமிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மருமகன் லிங்கத்தின் உணர்வுகள்

மாமா நீங்கள் என் மாமாவா இல்லை அப்பாவா? தடுமாற்றத்தில் என் மனம்
வேலும் மயிலும் மகனான
என்னை ஜெயத்தின் மருமகனாக
ஆக்கினீர்கள் உங்கள் மூத்த
புத்திரி ஜெயந்தியை கரம் பிடித்த
அன்று முதல் நான் உங்கள்
வீட்டுப் பிள்ளை ஆனேன்.
என்மேல் உங்கள் அன்பு.
அரவணைப்பு, கனிவான
பேச்சு, வழங்கிய ஆலோசனைகள் அனைத்தையும் என்
நினைவில் மீட்கிறேன்
மீண்டும் ஒரு தடவை உங்களோடு பேச ஊரெல்லாம்
உலாவ மனம் துடிக்கிறது
முடியவில்லையே!
கொடிய காலான் கவர்ந்தானே
மாமா! எங்கள் உறவும், தொடர்பும்
மாமன் மருமகனுக்கானதாய்
இருக்கவில்லையே. எனக்கான
நல்ல ஆலோசகனாக, உற்ற நல்ல நண்பர் உறவாக, என்றும்
என்குடும்பத்திற்கான வழிகாட்டியாகவே இறுதிவரை
வாழ்ந்தீர்கள் உங்களுக்கு
இறுதி விடை தரமுடியாத
நிலை இருந்த போதும் என்
துடிப்பை உணர்ந்த இறைவன்
உங்கள் முகத்தை இறுதியாய்க்
காணும் வாய்ப்பை வழங்கினான். பெரும் பேறு
பெற்ற உணர்வுடன் பறந்து
வந்தேன். உங்கள் பூதவுடல் பார்த்தேன், வணங்கினேன்
விம்மிய உணர்வுடன் விடை
தந்தேன் சென்று வாருங்கள்
மாமா மீண்டும் ஒருமுறை
ஜெயத்தின் மருமகனாக
லிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மருமகன் தவஞானம் (பவுண்)
# குமுறல்

கண்ணை இமைக்காத்த வண்ணம்,
போல் எம்மை காத்து வைத்த
எம் உத்தமரே மாமா
மகனாக மருமகனை
மகத்தால் கண்ட மாமாவே
எக்காலம் தணினும் எமக்காய்
எல்லா நலனும் செய்தவரே
நான் வெளியூர் வரும்போது
எனது மனைவியான சுகந்தியையும்
பிள்ளைகளான டனக்ஸ், கோபியையும்
அளவிற்கதிக அன்பையும் பாசத்தையும்
அரவணைப்பையும் கொடுத்தீர்கள்
இவ் கைமாறை உங்களுக்கு நான் எப்பொழுது
செய்து கொள்வேன் என ஏங்குகின்றேன்
இருந்தும் எனது மனைவிக்கு பணம் அனுப்பும் போது
சொல்லுவேன் ஊருக்கு போகும் போது மாமாவிற்கு
எதுவாயினும் வாங்கிக் கொடுங்கள் சுகந்தி என மனதார
மகன் போல் கூறுவேன் இறுதியில் உங்கள்
இறுதிக் கிரியையில் கூட வந்து உங்கள் முகம்
பார்க்க அருகதை அற்றவனாய் போய்விட்டேன்
என்னைப் பற்றி எனது குடும்பத்திடம் அடிக்கடி
நலம் விசாரித்து கண்ணீர் விட்டு கலங்குவீங்கள் மாமா
நீங்கள் எனக்கு மாமா அல்ல எனது தந்தை
இப்படி ஒரு மாமாவிற்கு நான் மருமகனாக இருப்பதென்றால்
இதில் நான் ஒரு பாக்கியசாலி என்று தான் கூறுவேன்
உங்களைப் போன்று ஒரு தெய்வத்தை எங்கு இனிக்காண்போம்
எக்காலம் தனிலே என்று எம்மை பிரிந்து ெ சன்றீரோ!
திக்கெல்லாம் தெரிக்கின்றது
எங்கள் தீதின்றிய மாமாவின் முகமே!

தவஞானம் (பவுண்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் விஜிதாவின் புலம்பல்

எம் தூய திருவிளக்கே! மாமா!

கண்களில் நீர்கலங்கி நிற்க

ஆழ்துயரம் எமை வதைக்க!

எமை விட்டு ஓடி மறைந்தீர்கள் என்ன!

நாம் நித்தம் ஈரவிழிகளோடு கலங்குகின்றோம்.

மாமா! என்னைப் பெண் பார்க்க வீட்டுக்கு நீங்கள்

வரும் போது உங்கள் கதையில் உள்ள, அன்பு பாசம்,

நேசம், அறிவுரை என்பதனை கவனிக்கும் போது எனது

கணவரின் குணத்தை புரிந்து சந்தோஷப்பட்டேன்

ஏனெனில் என்னுடைய வாழ்க்கையில் எனக்கு நல்ல

'கணவர்' கிடைத்துவிட்டதே என்று!

உண்மையில் நீங்கள் ஒரு நல்ல "கணவரை"

எனக்கு கொடுத்து கைப்பிடித்து வைத்தீர்களே! மாமா!

கோடான கோடி நன்றிகள். நீங்கள் உங்கள் மகனிற்கும் எமக்கும்

கொடுத்த

பாசத்தை நான் என்றும் மறவேன்!

ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும் போதாது

உங்கள் அன்புக்கு! மறு முறையும் எனக்கு மாமாவாக

பிறக்க வேண்டும் இவ்வுலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் சுதனின் மனத்துயர்

மாமா என எனக்கு வாய்த்த வரமே நீங்கள்
என் வாழ்வுத் துணையாய் உங்கள் மகளுடன்
இணைந்த போது உங்கள் குடும்பத்தில்
ஒருவனாயேற்றீர்கள் குறைகள் எதுவுமின்றி
வாழ வழி விட்டீர்கள் என் பிள்ளைகள்
மூவர் மேலும் உயிராகவே இருந்தீர்கள்
என் பிள்ளைகள் எங்களை விட உங்கள்மேல் தான்
பின்னிப்பிணைந்த உறவானார்கள்
பிள்ளைகள் கல்வியில் கண்ணாயிருந்தீர்கள்
நாம் குடியிருக்க காணி வழங்கினீர்கள்
அதில் அமைந்த வீட்டிலிருந்து தானே
இறுதிப் பயணத்தை ஆரம்பித்தீர்கள்
உங்கள் உறவுப் பிணைப்பால் வந்த
மக்களைக் கண்டு திணறி நின்றேன்
உங்கள் பிரிவைத் தாங்கும் சக்தியை
இறைவன் இதுவரை தரவில்லையே
இருந்தாலும் உங்கள் அன்பாலும் பாசத்தினாலும்
நிறைந்த நினைவுகளுடன் எம்
வாழ்வைத் தொடர்வோம் சென்று வாருங்கள்
மாமா!

சுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மருமகன் மனவேதனை

என் எண்ணம் எல்லாம் நிறைந்த மாமா! எங்கள்
மேல் என்ன குறை கண்டு மறைந்தீர்கள். உங்கள்
கடைக்குட்டி சுமிதாவின் கைப் பிடித்த நாள் முதல் எனை
உங்கள் மகனாகவே மதித்தீர்கள். நீங்கள் மறையும்
வரை அதே உறவு. அதே பாசம் பார்போர் கண்பட்டதோ
பாவியாய் ஆனென். பரிதவிக்க எனை விட்டு பரலோகம்
சென்றீர்களோ. என் வீடெல்லாம் நிறைந்து இருந்தீர்களே.
வீட்டிற்கு நான் வரும் போதேல்லாம் கருணை பார்வை
அப்பா வந்துவிட்டார் என பிள்ளைகளை அழைப்பீர்களே
நடமாடிய போது புதிய உடுப்பு. பிள்ளைகளுக்கு
சிற்றூண்டி எல்லாம் தந்து கொள்ளை கொண்டீர்களே
நெல்லியடியில் இருந்து எமை இங்கு அழைத்தீர்கள்
என் தொழில் மேம்பாட்டிற்கு முதல் தந்து பேருதவி
தந்தீர்கள். உங்கள் கடின உழைப்பை கண்டு வியந்தேன்.
உணவுண்டு கலகலப்பாய் கதை பேசி எமை மகிழ்வித்தீர்கள்
எப்படி மனம் வந்தது எமை பிரிய. என் பிள்ளைகளை எப்படி
தேற்றுவது என்று தெரியவில்லையே உங்களால் நான்
தேடிய சொத்து இருக்கு ஆனால் ஆகாரமாய்
அமைந்த நீங்கள் தான் எம்மோடு இல்லை. எக்காலம்
சென்றாலும் உங்கள் நினைவுடனே வாழ்வோம். மாமா

ராகவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளான டனக்ஸ், கோபியின் குமறல்

எங்கள் அன்புத் தெய்வமே அம்மப்பா!
எங்கள் தூய திருவிழக்கே அம்மப்பா!
கண்களில் நீர் கலங்கி நிற்க!
ஆழ் துயர் எமை வதைக்க
எம்மை விட்டு ஓடி மறைந்தீர்கள் என்ன?
நாம் இருவரும் நித்தம் ஈரவிழிகளோடு
கலங்கித் தவிக்கின்றோம். அம்மப்பா!
அம்மப்பா! எனக்கும் தம்பிக்கும் எனது தந்தையாரின்
அரவணைப்பு என்னவென்று தெரியாது. தந்தைக்கு
தந்தையாகவும், பேரனாகவும் கண்ணை இமைக் காப்பது
போல் என்னையும் எனது தம்பியையும் சுற்றி சுற்றி
கண்தூங்காமல் இரவு பகல் பாராது திண் பண்டங்களை
வாங்கி தந்து மகிழ்வித்ததை நினைக்கும் போது இதயம்
வலிக்கின்றது.
சொர்க்க காலமாக உங்களையும் எங்கள் ஊரையும் விட்டு
எமது பட்டப்படிப்புக் கல்விக்காக சிறு தொலைவான கொழும்பு
மாவட்டத்தில் வசித்துக் கொண்டிருந்தோம். இருந்தும்
உங்களை மறந்து நாமும் இருக்க மாட்டோம். நீங்களும்
எங்களை ஒருநாள் கூட தொலைப்பேசியில் அழைத்து நலம்
விசாரிக்காமல் விடமாட்டீர்கள். நாம் இருவரும் விடுமுறை நாட்களில்
தங்கள் ஊருக்கு வந்து நிற்கும் போது வைத்தியசாலைக்கு!
என்றோ கடைக்கு என்றோ மோட்டார் வாகனத்தில் ஏற்றிச்
சென்று மகிழ்விப்போம். ஏனெனில் நாம் பாடசாலையில்
சிறுவயதில் கல்விக் கற்றபோது எம் இருவரையும்
விபூதி அணித்து பொட்டு வைத்து அழகு பார்த்து கூட்டிச்சென்றதை
நாம் உங்களுக்கு அவ் கடமையை
செய்யவில்லை முழுமையாக என்று ஏங்கித்தவிக்கின்றோம்.
உங்கள் மூத்த பேரன் வெளியூர் செல்லும்
செய்தி கேட்டுத்தான் காளனவன் உங்களை எடுத்தானோ
நாம் என்ன பாவம் செய்தோமோ? என் மனதில் உங்களைப் பற்றி
எவ்வளவோ கற்பனையோடு உங்களிடமும்
சில விடயங்களை பகிரந்தளித்து விட்டு சந்தோஷமாக
இருங்கள். அம்மப்பா சொர்ப்ப நாளில் என்னைப் பற்றி
காது இனிக்க நற்சென்தி அறிவீர்கள் என்று சொல்லிவிட்டு
சென்றேன். ஆனால் இரண்டரை மாதத்தில் பின்பு எனது தாயின்
கூக்குரல் கேட்டது உங்கள் செய்தியைக் கேட்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கு திசை தெரியாமல் பணிபுரியும் இடத்தில் தடுமாறிப் புலம்பி விம்மி, விம்மி அழுதேன். அதனாலே நான் உங்கள் பெற்ற பிள்ளையில் ஒன்றாக உங்களின் கடமை முடிக்க இலங்கைக்கு ஓடோடி வந்தேன் அம்மப்பா!
நான் உங்களுடைய கோபி வர்ணிக்கின்றேன்.
என் பேரை எல்லோருக்கும் சத்தியவாக்கு கொடுப்பீர்கள்.
தற்போதும் வானத்தில் என் பெயர் உச்சரிப்பீர்கள் என நம்புகின்றேன்.
ஏனெனில் நீங்கள் எமக்கு கொடுத்த அன்பும் அரவணைப்பில் சொல்லில் அடங்காதவை. நீங்கள் எமக்கு ஒரு சொர்க்கத் தங்கம் யாரும் இப்படி பேரப்பிள்ளைகளை பாசம் காட்டுவது எனக்கும் எங்கும் தெரியவில்லை.

நான் பாடசாலை விடுமுறை நாட்களில் உங்களுக்கு அதை பிரயோசனப்படுத்துவேன். ஏனெனில் உங்களுடைய காலில் உள்ள காயங்களை மருத்துவம் செய்து மாறவைக்க முயற்சி செய்தேன். என்னைப் பார்க்கும் போதேல்லாம் என் தோற்றத்தைப் பார்த்து அழுது புலம்பி நீ மருத்துவம் படித்து முடித்து வரும்போது நான் உயிரோடு இருப்பேனா? தெரியவில்லை. என்று கண்ணீர் வடிப்பீர்கள் அம்மப்பா! அவ்வார்த்தை உண்மையாக பலித்து விட்டது என்னுடைய மனவேதனை யாரிடம் சொல்வது என்று என் இதயம் அழுகின்றது. நீங்கள் என் மீது ஆசைப்பட்டதை விண்ணுலகில் இருந்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறேன். நிம்மதியாக உறங்குங்கள் நானும் எனது அண்ணனும் நீங்கள் எங்கள் குடும்பத்தை நித்தம் நித்தம் நினைத்து, துக்கப்பட்டதை நீங்கள் விண்ணுலகத்தில் இருந்து பார்த்து சந்தோஷப்பட வைக்கின்றோம். எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உங்கள் பிரிவு எம்மை விட்டு நீங்காது தெய்வமே?
உறங்குங்கள். கல்லறையில்
சென்று வாருங்கள் அம்மப்பா!

டனக்ஸ், கோபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்தனின் மகனான பேரன்
# ஐனுசனின் கூமுறல்

பாசத்தின் உறைவிடமே அப்பப்பா!
பக்குவத்தின் தேவதையே அப்பப்பா!
உங்களை எப்போது இனிப் பார்ப்பேன்
உங்கள் ஒரு மகனுக்கு கிடைக்கப் பெற்ற
அருமைப் பொக்கிஷ இராட்சதையாக
உங்களுக்கு நான் கிடைக்கப் பெற்றேன்.
ஆனால் என்னையும் என் திறமையையும் உங்களுக்கு
வெளிப்படுத்தி சந்தோஷப்படுத்துவதற்கு நீங்கள் அருகில்
இல்லாமல் சீக்கிரம் விண்ணுலகம் சென்று விட்டீர்கள்
நான் அப்பா, அம்மா வோடு உங்களிடம் இலங்கைக்கு வரும்போது
ஐயா! தம்பி! நலமாக இருக்கின்றாயா? என மேலும் கீழுமாக
என்னை அன்போடு பார்த்து சிரித்து என்னை அணைத்து முத்தமிட்டு
ஆனந்தக் கண்ணீர் வடித்து கொள்வீர்கள் அப்பப்பா!
அப்பப்பா எனக்கு உங்கள் மகனை அற்புதமான அப்பாவாக!
கொடுத்தீர்கள். அன்பும், பண்பும், அரவணைப்பும், கண்தூஞ்சாமல் என்னையும்
என் அம்மாவையும் கவனிக்கும் இவ் சொர்க்கத்தை எமக்கு கொடுத்ததிற்கு
நாம் கோடி நன்றி சொன்னாலும்! அடங்காதவை!
ஆகவே! அப்பப்பா! எங்களுடைய எங்களுடைய அப்பா உங்களுடைய
அன்புப் பணியை
தொடர்ந்தே செல்வார். அவ்வழி உங்கள் பெயரை நானும் அப்பாவின்ஊடாக
கடைப்பிடித்து
உங்கள் பெயரை மறைய விடாது
ஜெயம் - ஜெயந்தன் - ஜனுசன் என்று உங்கள் பெயரில் தொடர்வேன்
இது நிச்சயம் உறுதி! சென்று வாருங்கள் அப்பப்பா!
உங்கள் பாதத்தில் என்னுடைய மலர்மாலையை
கண்ணீரோடு சமர்ப்பிக்கின்றேன்.

ஜனுசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தி பிள்ளைகளின் குமுறல்

எங்கள் வீட்டில் தானே படுத்திருந்தீர்கள்
ஊரையெல்லாம் துணைக்கழைறு பயணித்தீர்களே
ஏன் அம்மப்பா எம்மோடு தொடர்ந்திருக்க
மனமில்லையா, முடிவில்லையா!
ஒவ்வொரு நாள் விடியும் போதும்
தேடித் தேடிப் பார்க்கின்றோம்
எங்குமே தென்படுகிறீர்களில்லையே
யார்மேல் கோபம் சொல்லுங்கள்
அம்மப்பா சொல்லுங்கள்
எங்கள் மேல் உயிராய்த் தானே இருந்தீர்கள்
ஏன் இப்படி சருகாய்ப் பறந்து போனீர்கள்
நாங்கள் நன்றாய் படிக்க வேண்டுமென
அடிக்கடி கூறும் நீங்கள் இன்று
எமைத் துடிக்க விட்டு எங்கு செனறீர்கள்
நாங்கள் உங்கள் நினைவுடன் படிக்கின்றோம்
நல்ல நிலைக்கு வருவோம் என
உங்களிற்கு சத்தியம் செய்கின்றோம்
சந்தேகமின்றி அம்மம்மாவுடன் சேர்ந்திருங்கள்
வானில் இருந்து எம் வாழ்வுக்கு வழிக்காட்டுங்கள்
அம்மப்பா அம்மப்பா எங்கள் மேல்
கொண்டாட பாசத்தை என்றுமே
மறந்தீடாதீர்கள் என்றும்
உங்கள் நினைவுடனே

அபோஜன், டனோஜன், சாருஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமிதா, பிள்ளைகளான
# மதுஷசா, கிஷான், கபிஷா கண்ணீர்த் துளிகள்

எங்களோடு தானே இருந்தீர்கள் அம்மப்பா. ஒருபோதும் உங்கள் முகம் பாராமல் நாம் இருக்கவில்லையே அம்மப்பா! எம்மோடு நீங்கள் இருந்த காலங்கள் பசுமையானதே நினைத்து நினைத்து அழுகின்றோம் புத்தி தெரியாத காலத்தில் எம்மோடு இருந்த நீங்கள் இன்று நாம் வளர்ந்துள்ள போது உங்களை காணவில்லையே. அம்மப்பா எமை பள்ளிக்கு அனுப்ப துணை வந்தீர்கள் வெள்ளை சீருடையை எமை அழகு பார்ப்பதை நாம் பெற்ற பேறாகவே கருதினோம். படுத்திருந்தாலும் உங்கள் முகம் கழுவி திருற்று பூசி அழகு பார்த்தோம். .... அதே அழகு முகத்தை இன்றும் காணதுடிக்கின்றோம். உணவு ஊட்டிய போது எம் கை பிடித்து போதும் என்பீர்கள் இனி உங்கள் திருவாய் திறக்க மாட்டீர்களா? எம்மில் பொய்க் கோபம் கொண்டாலும், மறுகணமே உங்கள் அடி இருத்தி கதைபேசி மகிழ்வீர்களே! இதை எல்லாம் எப்படி மறப்போம். எமக்கு ஏன் இந்த துயரம் எமை விட்டு நெடுந்தூரம் சென்று விட்டீர்கள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகல மாடடீர்கள் . அம்மப்பா! கை அசைத்தோம். சென்று மீண்டும் ஒருமுறை அம்மப்பாவாக வாருங்கள்.

மதுஷா
கிஷான்
கபிஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்களின் குமுறல்

அன்பெனும் கரையேயில்லா
ஆழியில் நீருமாட்டி
துன்பமே அனுகா வண்ணம் தூய்மையாய் அரவணைத்த
எங்கள் அன்புத் தெய்வமே! ஆசைய்யா!
நாம் எல்லோரும் வாய் நிறைய ஆசைய்யா!
என்று அன்போடும் ஆசையோடும் அழைத்துக்கொள்வோம்
எங்கள் அம்மா அப்பா இல்லாத இடத்தை நீங்களும்
சித்தியும் ஈடுக் கொடுத்து எம்மை பெற்ற பிள்ளைகள் போல்
எந்த பாகு பாடும் இன்றி வளர்த்தீர்கள். பின்பு
சித்தி இறந்த பின்னர் இரண்டு குடும்பத்திற்கும்
பெரிய வழிக்காட்டி ஆசானாக எமை வழிநடத்தி
சென்றீர்கள் ஆசைய்யா! அனைவரும் ஆங்காங்கே நின்று
கண்ணீர் விட்டு துயரமடைகின்றோம்! எப்பொழுது
உங்கள் முகத்தை பார்ப்போம் பேசுவோம் என்று புலம்புகின்றோம்
ஆசைய்யா! உங்கள் குட்டி கண்ணீரோடு வர்ணிக்கின்றேன்.
நீங்கள் எமக்கு காட்டிய அன்பு உண்மையானது என்பதை
நிருபணம் ஆக்கி விட்டு சென்றீர்கள்
ஏனெனில் உங்கள் பெற்ற பிள்ளை போல் எனக்கும்
உங்களுடைய இறுதிக் கிரிகையில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தீர்கள்.
நான் வெளியூரிலிருந்து வரும் போது உங்களுக்கு
ஆகிய பொருட்களை வாங்கி இலங்கையில் வந்து நின்ற போது உங்களுடைய
இந்தக் கொடிய செய்தியைகேட்டு மனமுடைந்து விட்டேன்
என்னை பார்ப்பதற்கு ஆசைய்யா நீங்களும் ஆவலாக இருந்தீர்கள்!
என்ன பாவம் செய்தோமோ ஒருநாளில் உங்களை தவறவிட்டேன்
என் மனைவி பிள்ளைகளோடும் காணும் போது கூட
அன்பும் அரவணைப்பும் கொடுத்து சிரித்து மகிழ்வீர்கள்! இனி
எப்போ உங்கள் மகிழ்வை பார்ப்போம் என்று
புரியவில்லை. மறுமுறையும் எங்களுக்கு ஆசைய்யாவாக!
பிறக்க வேண்டும் இவ்வுலகில் என்று கூறிக் கொண்டு !
உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக் கொள்கின்றோம்!
பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் புலம்பல்

எங்கள் குடும்பத்தின் குத்து விளக்கே! அண்ணா
எங்கள் கிளையில் ஐவரில் யாரும் இவ்வளவு வருடமும்
உடையாமல் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்
நீ சீக்கிரம் உடைவாய் என சிறிதளவும் நினைக்கவில்லை
பாசம் வைத்த எங்களை பாதி வயதில் தவிர்க்க விட்டு சென்றாயே
உடன் பிறப்புக்கு என்பதற்கு இலக்கணம்
உங்களை விட யாருமில்லை
உங்கள் பிரிவை எண்ணி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

# மைத்துனர்களின் புலம்பல்

என் ஆசை மைத்துனரே!
உறவுக்கு உருவம் தந்து
உயரிய சிந்தைக் கொண்டு
உள்ளன் போடு உறவாடிய
உத்தம மைத்துனரே!
வாசலில் எம்மைக் கண்டால் - நீ
புன்னைகைப்பூ. உதிரிப்பாய்
உறவின் பெருமை சொல்லி
உவப்புடன் எம்மை அணைபாய்
சகோதரி இல்லாத வெற்றிடத்தை நிரப்பி
எம்மை சகோதரனாக ஏற்று அன்பைப் பொழிவீர்கள்
இக்காலம் தனிலே என்று
எம்மை பிரிந்து சென்றீரோ!
காலன் உங்களை கவர்ந்து சென்றாலும்
நீங்கள் காட்டிய அன்புப்பணி
எம்மை விட்டு அகழாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கீ
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்..

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இளமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்ததாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுவதும் மோய உரைப்பன்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்நதாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சினையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றுத்துப் பாரிக்கம் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

வல்லுக்குட்டி + சின்னம்மா
பிள்ளைகள்

நாகம்மா
பொன்னரியம்
**ஜெயம்**
இராமேசந்திரம்
பொண்ணுத்துரை

நல்லன் + நல்லம்மா

**ஜெயம்** + கல்யாணி

பிள்ளைகள்

ஜெயந்தி (சுவிஸ்)
ஶ்ரீஸ்வரலிங்கம் (சுவிஸ்)
சியானா (சுவிஸ்)
சிந்துஜா (சுவிஸ்)

சுகந்தி (கொழுப்பு)
தவஞானம் (லண்டன்)
டனக்சாந் (லண்டன்)
கோபிநாத் (கொழும்பு)

ஜெயந்தன் (ஜேர்மனி)
விஜிதா (ஜேர்மனி)
ஜனுசன் (ஜேர்மனி)

வசந்தி (பளை)
சுகந்தகுமார் (பளை)
அபோஜன் (பளை)
டனோஜன் (பளை)
சாருஜன் (பளை)

சுமிதா (பளை)
தசிராகன் (பளை)
மதுஷா (பளை)
கிஷான் (பளை)
கபிஷா (பளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எம் இதயத் தீபம் 04.01.2022 அன்று அணைந்த சேதியறிந்து ஓடோடி வந்து எமது துயரில் பங்காற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஈமக்கிரியையிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம், கண்ணீர் அஞ்சலித் பதகை வெளியிட்டோருக்கும் ஒலிப் பெருக்கி அறிவிப்பு செய்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகள் நடைப் பெறும் பொழுது எமது தந்தையாரைப் பற்றி வாழ்த்தி உரையாற்றிய நல்லெண்ணம் கொண்ட பெரியோர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்ளூர், வெளியூர் உறவுகள் வெளிப்படுத்திய துயர் பகிர்வுக்கும் இன்று நடைபெறும் சபீண்டகரண நிகழ்வில் கலந்துக் கொண்டவர்களுக்கும் சமயச் சடங்குகளை நிகழ்த்திய சிவச்சாரியாருக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!
ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

முகவரி :-
வண்ணாங்கேணி
பளை.
(ஜெயந்தன்) மகன்

தொகுப்புரை
த. சுகந்தி
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டி சுவாமியின் அருளுரைகள்

அதிகாலை நித்திரை விட்டெழு

எழும்பும்போதே ஆண்டவனை நினை.

தேநீர், காப்பியைத் தூரத்தள்ளு

மரக்கறி உணவு மனதிற்கு மகிழ்ச்சி

பசித்து வந்தோர் முகம் பார்.

உண்ணும் முன்பு ஒரு கணம் இறைவனை நினை.

கடமையிற் தவறினால் கடவுளை காணமாட்டாய்.

நெற்றிக்குழுக்கு விபூதி பூசுதல்.

படுக்க முன்பு இறைவனை பிரார்த்தி.

உன்னையும் அறியாய் என்னையும் நம்பாய்

உன்னிடத்திலுள்ளதை இல்லையென்னாமல்

மற்றவர்களுக்கு கொடு

எங்கும் மலையாதே இருந்தபடியே இரு,

கோபத்தை விடு

முரகன் அருள் தானே வரும்

சாதுக்கள், சந்நியாசிகள் ஏன் இறைவனே வீட்டிற்கு

வந்து விட்டால் கூட அவர்களை உள்ளன்போடு

உபசரித்து ஒரு நேர உணவளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org